Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 2 ஆம் நாள் முஹர்ரம் 2 (15-5-64) வெள்ளிக்கிழமை இதழ் 94

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 3 00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-35 |

# தலைமை ஆசிரியர்கள் சிங்கள தகுதி

## நவம்பருக்கு முன் மூன்றும் வகுப்பு சித்தியடைய வேண்டும்

கொழும்பு, வியாழன்

கல்லூரி அதிபர்கள் உப அதிபர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் இவ்வருடம் நவம்பர் மாதம் 14-ந் திகதிக்கு முன் சிங்களத்தில் மூன்றும் வகுப்புச் சித்தியடைய வேண்டுமென்று கல்வி இலாகா அறிவித்துள்ளது.

எல்லாப் பிரிவுகளிலுமுள்ள கல்லூரி, பாடசாலை ஆகியவற்றின் அதிபர்கள், உப அதிபர்கள், தலைமையாசிரியர்கள் தலைமையாசிரியைகள் அனைவரும் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென்றும் மூன்றும் வகுப்புச் சித்திபெறவேண்டிய கடைசித் திகதி 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ந் திகதியென்றும் கல்வி இலாகாவின் சுற்றுநிருபம் தெரிவிக்கிறது. 1961-62-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதிக்கு ஐம்பது வயதைத்தாண்டியவர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டிய அவசியமில்லை.

கல்வி இலாகாவின் இச் சுற்று நிருபம் பற்றி ஆசிரிய சங்கங்களும், அதிபர், தலைமை ஆசிரியர் சங்கங்களும் கூடி ஆலோசனை செய்யவிருக்கின்றன. நாளை நடைபெறவிருக்கும் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் கூட்டத்திலும் இச் சுற்றுநிருபம்பற்றி குறிப்பிடப்படவிருக்கிறது.

## தனிப்பட்ட பாடசாலைகளில் கட்டணம் குறைக்கப்படவேண்டும்

### மாணவர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

தனிப்பட்ட பாடசாலைகளில் வசதிக் கட்டணத்தை 20 ரூபாவிலிருந்து 2 ரூபாவாக குறைக்க வேண்டுமென்றும் பிரவேசக் கட்டணம் விடைத்தாள் கட்டணம், விஞ்ஞான நூல் நிலைய கட்டுப்பணம் ஆகியன வசூலிப்பதை நிறுத்தவேண்டுமென்றும் அரசாங்கத்திற்கும், கல்விஸ்தாபனங்களுக்கும் அகில இலங்கை மாணவர்சங்கம் விடுத்துள்ள கோரிக்கைகள் பற்றி அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும்அகில இலங்கைமாணவர் சங்கத்தின் அங்குரார்ப்பண மகாநாட்டில் விவாதிக்கப்படும்.

மாணவர் சங்கம் பின்வரும் கோரிக்கைகளையும் விடுத்துள்ளார்கள்: படித்த வாலிபர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கவேண்டும். நாட்டின் செல்வத்தை பெருக்கக்கூடிய வாலிபர்களின் தொழில் திறமையைப் பயன்படுத்தவேண்டும். சகலமாணவர்களுக்கும் உயர்தரக்கல்வியளிக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையை சிரேஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியாக்க வேண்டும், யாழ்ப்பாண கலாச்சார பல்கலைக்கழகத்தில் பொறியியல், வைத்தியம், விஞ்ஞானம், ஆகிய துறைகளை ஏற்படுத்தவேண்டும். விடுதிச்சாலைகளை தனியார் பொறுப்பிலெடுக்கவேண்டும். தனியார் கல்லூரிகளை தேசியமயமாக்கவேண்டும். சகல மாணவர்களுக்கும் விஞ்ஞானக்கல்வி வசதியளிக்க வேண்டும். பாடப்புத்தகங்களை அரசாங்க அச்சகத்தில் அச்சிட்டு மலிவாக விற்பனைசெய்ய வேண்டும்.

மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் மாணவர்களின் ஊர்வலம் ஒன்று நடைபெறுமென்றும் இதில் ஏராளமான மாணவர்கள் பங்குபற்றுவார்களென்றும் தெரியவருகிறது.

காஷ்மீர் பிரச்னை

## பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும்

### பந்தோபஸ்து சபை அபிப்பிராயம்

நியூயோர்க், மே 14

காஷ்மீர் பிரச்னையை இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடிப் பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், ஐ. நா. பந்தோபஸ்து சபை இதுசம்பந்தமாக தீர்வு எதுவும் காண முடியாதெனப் பந்தோபஸ்து சபை அங்கத்தவர்கள் பலரும் ஒப்புக்கொண்டுள்ளதாக பந்தோபஸ்து சபையுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

பந்தோபஸ்து சபைத்தலைவர் அங்கத்தவர்களுடன் தனித்தனியாக பேச்சு நடத்தி வருகிறார். இது முடிந்ததும் இன்றோ. நாளையோ சபையில் தலைவர் திரு செய்டோ ஒரு முடிவு தெரிவிப்பார். இதுவே காஷ்மீர் சம்பந்தமாக ஆராயும் சபையின் இறுதிக் கூட்டமாகவும் இருக்கும் என நம்பப்படுகிறது.

பந்தோபஸ்து சபையின் கூட்டம் பெப்ரவரியில் நடைபெற்ற கூட்டத்திற்குப் பின்னர் காஷ்மீர் சம்பந்தமாக எதுவும் நிகழவில்லையெனவும், புதிய விஷயங்கள் எதையும் புகுத்தாது இப்பொழுதுள்ள நிலையை மோசமாக்காதவகையில் இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என ரஷ்யப் பிரதிநிதி டெடரென்கோ தெரிவித்தார்.

சபையின் முடிவு எதுவும் பிரச்னைக்கு முடிவு காணாதெனவும் ஐ. நா. வேண்டுமானால் தலைமைக் காரியதரிசியை அழைத்து இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் எனவும் அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

இப்பொழுதுள்ள நிலையை மோசமாக்காதவகையில், இரு நாடுகளும் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டுமெனவும் தலைமைக் காரியதரிசி பேச்சுவார்த்தைகளால் ஏற்படும் முன்னேற்றத்தை அடிக்கடி சபைக்கு தெரிவிக்க வேண்டுமெனவும் வேறு பல அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

### ஷேக் அப்துல்லா பாகிஸ்தான் செல்வார்

கடந்த இரண்டு வாரமாக புதுடில்லியில் சுற்றுப்பிரயாணம் செய்த பிரதமர் நேரு உட்பட இந்தியத் தலைவர்களுடன் காஷ்மீர் சம்பந்தமான பேச்சுவார்த்தை நடத்திய திரு ஷேக் அப்துல்லா நேற்று ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்தார். அடுத்த வாரம் இவர் பாகிஸ்தான் செல்வார். அங்கு இரண்டுவாரம் தங்கியிருந்து ஜனாதிபதி அயூப்கான் உட்பட பாகிஸ்தான தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## ஒருவார காலத்தில் மலேசிய உச்சி மகாநாடு

### ஐ. நா. விலுள்ள பிலிப்பைன்ஸ் பிரதிநிதி நம்பிக்கை

மணிலா, மே 14

மலேஷியத் தகராறு சம்பந்தமாக உச்சி மகாநாடு ஒன்று மிகவிரைவில் நடைபெறும் என ஐ. நா.வில் உள்ள பிலிப்பைன்ஸ் பிரதிநிதி திரு. லொபெர்ட்ஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

இவர் இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்னோவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு. மகபகாவின் சொந்த செய்தி ஒன்றையும் திரு. லொபெர்ட்ஸ், ஜனாதிபதி சுகர்னோவிடம் அளித்தார்.

திரு.லொபெர்ட்ஸ்அமெரிக்கா திரும்புமுன் மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானையும் சந்தித்து பேச்சு நடத்துவார்.

பிரஸ்தாப உச்சிமகாநாடு அதிகமாக இன்னும் ஒருவார காலத்தில் நடைபெறலாம் எனவும் குறிப்பான திகதியும் இடமும் மிகவிரைவில் நிச்சயிக்கப்படும் எனவும் திரு. லொபேர்ட்ஸ் தெரிவித்தார்.

## கம்யூனிஸ்ட் கட்சியின் 21-வது ஆண்டுவிழா

கொழும்பு, வியாழன்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது 21 வது ஆண்டு நிறைவு தினத்தை ஜூலை 3ம் திகதி கொழும்பிலும் 4-ம், 5-ம் திகதிகளில் மற்றப் பகுதிகளிலும் கொண்டாடவிருக்கின்றது.

இதையொட்டி பொதுக்கூட்டங்களை நடத்தவும் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## இன்று

நல்லூர் சண்முக தீர்த்த மண்டபத்தில் மாலை 6-45 மணிக்கு ஆசிரியர் திரு. க. முருகேசு "சமய வழிபாடு" என்னும் பொருள் பற்றிப் பேசுவார்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 6 மணிக்கு சமயப்பிரசாரகர் திரு. த. சுப்பிரமணியம் "கண்ணப்பநாயனார்" என்ற தலைப்பில் பேசுவார்.

நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் மாலை 7 மணி முதல் ஆசிரியர் திரு. சி. வேலாயுதம் "திருநீலகண்ட நாயனார்" சரித்திரத்தை விரிவுரைப்பார்.

இம்மூன்று நிகழ்ச்சிகளும் அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்கத்தின் ஆதரவில் நிகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## 30 தமிழ் வர்த்தக ஆசிரியர் நியமிக்கப்படுவர்

### கல்வி அதிகாரி உறுதி

சுழிபுரம், வியாழன்

விசேஷ ஆசிரியர் வர்த்தக வகுப்புக்கு தமிழ்மொழி மூலம் பயிற்சி பெற்ற 30 ஆசிரியர்களை நியமிப்பதாக பதில் வித்தியாதிகாரி திரு. டி. என். கெற்றியாராச்சி உறுதியளித்துள்ளார்.

தமிழரசுத் தலைவரும் காங்கேசன் துறை எம். பி யுமான திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் அகில இலங்கை வர்த்தகக் கலை மன்ற பிரதிநிதிகள் பதில் வித்தியாதிகாரியை இது விஷயமாகப் பேட்டிகண்ட போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

அண்மையில் 170 பாடசாலைகளுக்கு வர்த்தக ஆசிரியர்களை நியமிக்கும்படி வேண்டப்பட்ட போதும் 12 ஆசிரியர்கள் மட்டுமே நியமனம் பெற்றுள்ளனர் எனவும் மிகுதிப் பாடசாலைகளுக்கு சமீபத்தில் நடைபெற்ற மாணவ ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை வர்த்தக ஆசிரியர்களாக நியமிப்பதற்கும 1964-ம வருடம் நடைபெறும் மாணவ ஆசிரியர் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுபவர்மூலம் காலிஇடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்ட கோரிக்கை சம்பந்தமாகவும் மந்திரி உடன்பாடு தெரிவித்துள்ளார்.

வர்த்தக பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மந்திரி உறுதி அளித்துள்ளார்.

**மணிவாக்கு**

பிறருக்குச் சேவை செய்கையில் இரக்கத்தால் தூண்டப்படுவதற்குப் பதில், அவர்களிடம் கடவுள் குடிகொண்டுள்ளாரென்பதை உணர்ந்து கடவுளுக்குச் செய்யும் பணியாகச் செய்ய வேண்டும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

சுபானு (?) குரோதி ஆண்டு வைகாசி 2 உ (15-5-64)

## தமிழாசிரியர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

ஆசிரியர்கள் சாதாரணமாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தும் வழக்கமில்லை. கூட்டங்கள் போட்டு தீர்மானங்கள் நிறைவேற்றுவார்கள் அவ்வளவுதான். ஆனால் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலே அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர்கள் மாபெரும் ஊர்வல ஆர்ப்பாட்டம் நடத்தமுன்வந்துள்ளனராயின் அதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும். பொறுமைக்கு ஓர் எல்லையுண்டென்பர். சென்ற 17 ஆண்டுகளாகப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தனர். தங்களது நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்த்து ஆவன செய்யுமென்று காத்திருந்தனர். ஆனால் எவ்வித விமோசனமும் பிறக்காததால்பொது மக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற இப்போது ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த வேண்டிய நிலையிலுள்ளனர்.

பொதுமக்களுக்கு தமிழாசிரியர்களின் குறைகளென்னவென்பது சரிவரத் தெரியாது. முன்னைவிட அதிகமான சம்பளம் அவர்கள்பெறுகிறார்கள்தானே என்று ஓர் எண்ணம். பணம் காசைவிட மானம் மரியாதைதான் ஒருவருக்குப் பெரிதாகும். நாடு அடிமைப்பட்டிருக்கையில் ஆங்கிலப் பயிற்சி பெற்ற ஆசிரியருக்கு விசேஷ சம்பளம் முதலிய சலுகைகள் அளிக்கப்பட்டன. வேறு விதியில்லை என்று இந்த அவமானத்தை சுயமொழி ஆசிரியர்கள் சகித்து வந்தார்கள். நாடு அரசியல் விடுதலையானபின்பாவது தங்களுக்குள்ள இந்த அவமதிப்பு நீங்குமென்றும் மொழி வேற்றுமை பாராமல் எல்லா ஆசிரியர்களுக்கும் சமசம்பளம் அளிக்கப்படுமென்றும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். இந்தக் கொள்கையை 'வில்மட் பெரேரா கமிஷ'னும் ஆதரித்திருக்கிறது. என்றாலும் அரசாங்கம் இதை அமுல் நடத்த முன்வரவில்லை. ஏன்?

சிங்களமொழி ஆசிரியர்களுக்கும் இதே சங்கடம்தான். அவர்களும் பெருங் கிளர்ச்சி செய்கின்றார்கள். அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாயின் தமிழ் ஆசிரியர்களுக்கும் விமோசனம் பிறக்கலாம். ஆனால் சுயபாஷா ஆசிரியர்களுக்கு ஆங்கில ஆசிரியர்களைப் போல சமசம்பளம் அளிப்பதாயின் அதற்கு அதிக செலவாகும். ஏற்கெனவே கல்வி அமைச்சுக்காக சுமார் 35 கோடி செலவாகின்றது. இது மொத்த வருமானத்தில் ஐந்தில் ஒன்றுக்கு மேலாகும். இச்செலவைச் சமாளிக்க முடியாமல் அரசாங்கம் ஏதேதோ செய்கையில் இன்னும் அதிக செலவுகளைச் செய்ய அது தயங்குவது இயற்கையே. அரசாங்கத்துக்கு அதிக செலவில்லாமலும் தமிழ்சிங்கள ஆசிரியர்களின் நியாயமான இக்கோரிக்கையை நிறைவேற்றவும் வழி கண்டாலே இப்பிரச்னை தீரமுடியும். வழி என்ன? சுயபாஷா ஆசிரியர்களின் சம்பள விகிதத்துக்கு ஆங்கில ஆசிரியர்களின் சம்பளத்தையும் இனிக் குறைப்பதாயின் அரசாங்கத்துக்கு கல்விச்செலவு சற்றே குறைவதுடன் சுயபாஷா ஆசிரியர்களின் இந்த நாட்பட்ட அவமானமும் நீங்க வழி பிறக்கலாம்.

தமிழ் ஆசிரியர் விஷயத்தில் கல்விப்பகுதியினர் மாற்றாந்தாய்க் கொள்கையைக் கடைப்பிடிப்பதாயும் சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்ச்சி கிடைத்திருக்கையில் தமிழாசிரியர்களுக்குக்கிடைக்கவில்லை என்றும் 125 தமிழ்ப் பாடசாலைகள் தலைமை ஆசிரியர் இன்றே இயங்குவதாயும் அகில இலங்கைத் தமிழாசிரியச்சங்கப் பொதுக் காரியதரிசி எடுத்துக்கூறி தமிழாசிரியரின் பல கோரிக்கைகளின் நியாயத்தையும் விளக்கிஎழுதியிருக்கிறார். இதை நேற்று 'ஈழநாடு' பத்திரிகையில் படித்த நேயர்கள், தமிழ் ஆசிரியர்களின் உணர்ச்சிகளையும் பல குறைகளையும் நன்கு உணர்ந்திருக்கலாம். அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்குமென்பது வசனம். தமிழாசிரியர்களின் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலமூலம் அவர்களது குறைகளெல்லாம் உடனடியாகத் தீர்ந்துவிட முடியாதுதான். தமிழ்ப் பொதுமக்களும் இங்கு உரிமை இழந்த நிலையில் தமிழாசிரியர்களுக்கும் சிலவிசேஷ சங்கடங்கள் இருக்கவே செய்யும். என்றாலும் நாட்டின் எதிர்கால பிரஜைகளை உருவாக்கிவரும் நமது ஆசிரியர்களின் கோரிக்கைகளை இனி வெகுகாலம் மறுக்க முடியாது. அதற்கிடையே ஆசிரியர்கள் கட்டுப்பாடாகவும் ஒற்றுமையாகவும் கிளர்ச்சி செய்வதுடன் தங்கள் கடமைகளை மேலான முறையில் நிறைவேற்றி மாணவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து பொதுமக்களின் பூரண ஆதரவையும் பெறுவதன்மூலம் தங்கள் வெற்றிக்கு வழி செய்து கொண்டவர்களாவர்.

# முஸ்லிம்களின் புதுவருடம் ஆரம்பமாகிறது

— எம். கே. எச். முகம்மது, எருக்கலம்பிட்டி —

(முஸ்லிம்களின் புதுவருடமாகிய ஹிஜ்ரி 1384-ம் ஆண்டு நேற்று ஆரம்பமானது. இஸ்லாமிய வருடம் எவ்வாறு கணக்கிடப்படுகின்றது என்பதையும் 'முஹர்றம்' எனப்படும் இம்மாதத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது.

ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களும் அவரவர் புதுவருடப்பிறப்புக்களைக் கொண்டாடி வருகின்றனர். கிறிஸ்து மதத்தைச் சார்ந்தவர்கள் தைத் திங்களின் முதல் தேதியையும், பௌத்தர்களும் சைவசமயத்தைச் சார்ந்தவர்களும் சித்திரைத் திங்களின் முதல் நாளையும் தமது புதுவருடத்தினமாகக் கருதி அந்நாளை மிகவும் குதூகலமாகக் கொண்டாடி வருகின்றனர். அதேபோன்று உலக முஸ்லிம்கள் அனைவரும 'முஹர்றம்' எனப்படும் றபீஉல் அவ்வல் மாதத்தின் தலைப்பிறைத் தினத்தைத் தமது புதுவருட தினமாகக் கொண்டாடுகின்றனர்.

### இஸ்லாமிய வருடம் கணக்கிடப்படும் விதம்

ஆங்கில வருடம் (உரோம வருடமும்) யேசுகிறிஸ்து அவர்கள் பிறந்ததிலிருந்து கணக்கிடப்பட்டு வருவது போல, இஸ்லாமிய வருடம் இறுதி இறைத் தூதர் றசூலே கரீம் முகம்மது நபி (ஸல்) அவர்களின் 'ஹிஜ்ரத்' திலிருந்து ஆரம்பமாகின்றது. 'ஹிஜ்ரத்' என்னும் பதம் வெறுத்தல் என்ற பொருளைத் தருகின்றது. ஆகவே அண்ணலவர்கள் தமது தாயகமாம் திரு. மக்கா நகரை வெறுத்து மதீனாவுக்குச் சென்ற நிகழ்ச்சியே 'ஹிஜ்ரத்' என அழைக்கப்படுகிறது.

கி. பி. 570-ல் ஜெனனமான நபியவர்கள் தமது 40-வது வயதில் நபித்துவத்தைப் பெற்று அதனை மக்களுக்குப் போதிக்க முற்பட்டார்கள். அண்ணலவர்களின் ஏக தெய்வக் கொள்கையை விரும்பாத மக்கா வாசிகளுட் சிலர் அவர்களுக்கு அளப்பரிய இன்னல்களை விளைவித்தனர். துன்பங்களைச் சகிப்புத் தன்மையோடு பொறுத்துத் தமது பிரசாரத்தை தொடர்ந்து செய்து வந்த போதிலும் ஈற்றில் தனது உயிருக்கே உலை வைக்கப் பகைவர்கள் திட்டமிட்டிருந்ததை அறிந்த நபியவர்கள் தமது தாயகத்தை விட்டு இரவோடு இரவாக தோழர்கள் சிலருடன் மதினாவுக்குச் சென்றார்கள். இச்சம்பவம் கி. பி. 622-ல் (றபீஉல் அவ்வல் தலைப்பிறையில்) நிகழ்ந்தது. ஆகவே இஸ்லாமிய வருடமும் அத்தினத்திலிருந்தே கணக்கிடப்பட்டு வருகின்றது. பிறைக் கணக்கைக் கொண்டே இஸ்லாமிய வருட சலனம் கணக்கிடப்படுவதால் முஸ்லிம்கள் தமது புதிய வருடமாகிய ஹிஜ்ரி 1384-ம் வருட ஆரம்பதினத்தை கொண்டாடுகின்றனர்.

### இப்பகுதியின் முக்கிய சம்பவம்

'முஹர்றம்' என்ற இம்மாதம் வருடத்தின் ஆரம்ப மாதமாக இருப்பினும் இம்மாதத்தின் பத்தாம் பிறையன்று நிகழ்ந்த ஹுஸைன் (றலி) அவர்களின் உயிர்த்தியாகச் சம்பவம் ஒன்றே இம்மாதத்திற்கு அத்துணைச் சிறப்பை அளிக்கா நிற்கின்றது என்று கூறுவது மிகப் பொருந்தும்.

நபி முகம்மது (ஸல்) அவர்களின் மரணத்தின்பின் முஸ்லிம் இராட்சியத்தை முறையே அபூபகர் (றலி), உமர் (றலி), உதுமான் (றலி), அலி (றலி) ஆகிய கலீபாக்கள் நல்லாட்சி புரிந்துவந்தனர். கடைசிக் கலீபா அலி (றலி) அவர்கள் கி. பி. 661-ல் இறையடி சேர்ந்ததும் குலபாஉ ராஷிதீன்களின் (உண்மையான நேர்வழியில் நல்லாட்சி புரிந்த கலீபாக்களின்) ஆட்சியும் மறைந்து போக இஸ்லாமிய இராட்சியம் 'உமையாக்கள்' என்ற பிறிதொரு வம்சத்தினரின் கைக்கு மாறியது. இவ்வம்சத்தினரின் இரண்டாவது அரசனாக கி. பி. 680-ல் ஆட்சிக்கு வந்த யெஸீது என்பவரின் துர்நடத்தையையும், இஸ்லாத்திற்கு முரண்பட்ட ஆட்சியையும் கண்ணுற்ற மக்களின் உள்ளம் வெதும்பின. இறுதிக் கலீபா அலி (றலி) அவர்களின் குமாரருள் ஒருவரான ஹுஸைன் (றலி) அவர்கள் கொதித்தெழுந்து யெஸீதிடம் நேர்மை வேண்டி நின்றனர். எனினும் அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்படவே இஸ்லாம் மதத்தைக் காப்பாற்றுவான் வேண்டி 'போர்க்கோலம்' பூண்டார்கள். போர் தொடங்குவதற்கு முன்னர் நான் எங்கிருந்து வந்தேனோ அங்கு நான் சமாதானத்துடன் செல்ல எனக்கு அனுமதி அளியுங்கள். இல்லையாயின் அரசன் யெஸீதுடன் நான் நேரே சென்று கதைக்க எனக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள் இதனையும் நீங்கள் மறுப்பதாயின் இஸ்லாத்தின் சத்துருக்களாகிய உங்களுக்கு எதிராக யுத்தம் செய்ய என்னை அனுமதியுங்கள் என்று மனிதாபிமானத்தோடு கேட்ட வேண்டுகோள்கூட நிராகரிக்கப்படவே, யூப்றடீஸ் நதியின் மேற்குக்கரையில் கூபாவின் வடக்கேயுள்ள கர்பலா என்ற இடத்தில் யுத்தம் மூண்டது. 'கர்பலாப்போர்' நிகழ்ந்து 1300 வருடங்களாகியும் அவ்யுத்தத்தின் நிகழ்ச்சிகளும் கொடூரச் செயல்களும முஸ்லிம்கள் மனதைவிட்டு அகலவில்லை.

தம்மோடு சேர்ந்திருந்த கூபா வாசிகள் தக்கதருணத்தில் ஹுஸைன் (றலி) அவர்களை விட்டுப்பிரியவே மக்கா வாசிகளின் ஒரு சிறு கூட்டத்தினரின் உதவியோடு போரை நடத்தினர். இவர்களின் பக்கத்திலுள்ள பெண்களினதும் பிள்ளைகளினதும் அபயக்குரல்கள் வானைப்பிளந்தன. தம்மைச் சார்ந்த போர்வீரர்கள் ஒவ்வொருவராக மடிவதைக் கண்ட ஹுஸைன் (றலி) அவர்கள் மனந்தளரவில்லை. தாகம் தமது தொண்டையை வரட்ட தமது குழந்தையொன்றை ஒரு கையில் ஏந்தியவாறு பகைவர்களின் அம்புமாரிக்கிடையே நீர் தேடிப் புறப்பட்டார்கள் றலி அவர்கள். என்றாலும் பகைவர்களின் அம்புமாரி தம்மைத் திரும்பும்படி செய்தது. தமது தாகத்தையும் பொருட்படுத்தாது உக்கிரமாகப் போர் செய்தார்கள். தனது கரத்திலிருந்த செல்வக் குழந்தையும் பறிபோனது. தனது சகாக்களும்குடும்பத்தினரும் மாண்டனர். நிர்க்கதியாய் நின்ற அவர்களின் தாகத்தைத் தீர்க்கும்பொருட்டு ஒரு பெண் கொண்டுவந்த தண்ணீர்ப் பாத்திரத்தின் அருகில் தமது வாயைக் கொண்டு சென்றபோது பகைவன் ஒருவனின் ஈட்டி இமாமின் மார்பைப் பிளந்ததால் உயிர்நீத்தார்கள். சேனைத் தலைவனான சிமார் என்ற பாதகன் தனது வஞ்சத்தைத் தீர்க்கும்பொருட்டு அன்னாரின் சிரசைக் கொய்து குதிரைகளின் காலால் மிதிக்கச் செய்தான். இக்கோரச் சம்பவம் முஹர்றம் மாதத்தில் நிகழ்ந்ததாகையால், இத்தினத்தில் ஹுஸைன் (றலி) அவர்களின் தியாகத்தை நினைவு கூர்ந்து அத்தியாகச் சிந்தையோடு நாமும் நடக்க முயற்சிப்போமாக.

## ஐயாறன் எழுதுவது

நேற்றுக் காலை ஒரு கோவில் குருக்கள் வந்தார். தம்மைவிட படித்தவரென்று ஒரு புதிய குருக்களை கோவில் நிர்வாகி திடீரென நியமித்துவிட்டதாயும், தாம் மானத்துடன் தன் கடமைகளைச் செய்யமுடியாது போனதால், சாவியைக் கொடுத்துவிட்டு வெளியேற நேரிட்டதாகவும் மிக துக்கத்துடன் தெரிவித்தார். கேட்க வருத்தமாக இருந்தது.

பொதுவாக இலங்கையிலே பல கோவில் குருக்கள்மார்களின் நிலையும் பெருமைப்படத்தக்கதன்று. எந்த சமயமும் அவர்களது 'சீட்டு' கிழிந்துவிடலாம். தெய்வத்தை விட, கோவில் தர்மகர்த்தாவுக்குத் தான் தாசானுதாசனாகக் கடமையாற்றவேண்டியுள்ளதாயும் சற்றே மாறுபட்ட கருத்துக் கொண்டால் வேலை இழந்து ஊரையே விட்டுப்போய்விட நேரிடுமென்றும் ஓரன்பர் தெரிவித்தார். பாவம்!

"முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன்" என்று பாடினார் சுந்தரர் கோவில் பூசகர்களைப்பற்றி. ஆனால் இங்கு சில கோவில்களிலே பூசகர்களின் நிலைமையைக் கண்டால், அந்தத் தம்பிரான் தோழர் என்ன கூறுவாரோ!

* * *

ஒரு கோவிலின் பெருமை அங்கு பூசை செய்யும் பூசகரின் பக்தியிலும் ஒழுக்கத்திலும் அறிவாற்றல்களிலும் பெரிதும் தங்கியுள்ளது, சில குருக்கள்மார்களை மக்கள், தெய்வம் போல் போற்றுவதையும் பார்த்திருக்கிறேன். பொதுவாக குருக்கள்மார்களை மற்ற சம்பள சிப்பந்திகள்போல் கருதாமல் கோவில் நிர்வாகசபையிலே அவரையும் ஓர் அங்கத்தவராக்கி, பூசை முதலியன விஷயமாக அவரது யோசனைகளையும் கேட்பதாயின், அவர் மதிப்பு உயர்வதுடன், அவரும் சுயமதிப்புடனே உற்சாகமாக, பூசை செய்வார்.

இது இங்கு நடைபெற முடியாதென்றும், குருக்கள்மார்களுக்கு அவ்வளவு மதிப்புக்கொடுக்க இங்கு சம்மதிக்கமாட்டார்களென்றும் ஒரு குருக்கள் கூறக்கேட்டு மிக வருத்தமாக இருந்தது.

மற்ற சமயங்களிலேயும் சிறப்பாக பௌத்த சமயத்திலும் குருக்கள்மார்களுக்கு எவ்வளவு மதிப்பும் மரியாதையும் உள்ளது. சைவம் இங்கு மீண்டும் தலைதூக்கவேண்டுமாயின், தங்கள் குருக்கள்மார்களைப் பற்றி சமூகம் அலட்சியமாக இருக்கமுடியாது. அவர்களது குறைகளை அறிந்து, அவற்றை நீக்கத் தக்க முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

* * *

எதிர்பார்த்தற்கு மாறாக, கதிர்காமத்திலே டாகபா விழாவுக்கு டட்லி செல்லவில்லையாம்! அவர் அத்திருப்பணிச் சபையில் முக்கிய நிர்வாகி. அப்படி இருந்தும் விழாவுக்குச் செல்லாது போனதேன்? பிரதமர் ஸ்ரீமாவோ அங்கு வந்ததாலா?

அவர் வருவாரென்று ஆவலுடன் எதிர்பார்த்தவர்களுக்கெல்லாம் பெரிய ஏமாற்றமாக இருந்திருக்கும். இரு தலைவர்களிடமும் உள்ள அரசியல் வேற்றுமைகளை நீக்கிக் கொள்ள அது நல்லதோர் சந்தர்ப்பமென்றும் நினைத்தேன். ஆனால்......! புத்தர் பெருமானின் பெயரால் கூட இணைக்கமுடியாத இவ்விரு கட்சி (பௌத்த) தலைவர்களையும், வேறு எந்த சக்தியால் தான் சமரசம் செய்துவைக்க முடியும்!

* * *

நல்லூர் கந்தனின் புதிய தேர் அழகாக வளர்ந்து வருகிறதாம். வேலை இராப்பகலாக நடப்பதாயும், வருகிற உற்சவத்துக்குள் இது கட்டி பூர்த்தியாகி, புதிய

(5-ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவுக்கு புட்டோ புத்திமதி

நியுயோர்க், மே 14

"அமெரிக்காவிடமும் சோவியத்யூனியனிடமும் அதிக ராணுவ உதவி பெறுவதற்காக இரண்டு நாடுகளையும் ஒன்றுக்கொன்று போட்டியில் ஈடுபட இந்தியா முயற்சி செய்கிறது" என்று பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஸில்புகார் அலி புட்டோ நேற்று நியுயோர்க்கில் பத்திரிகையாளர்சங்கம் ஒன்று அளித்த உபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அமெரிக்காவைவிட சோவியத்யூனியன் அதிக உதவி அளித்துள்ளதாக சமீபத்தில் இந்தியாவில் தெரிவிக்கப்பட்டதற்கு இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் சமீபத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருப்பதும் அமெரிக்காவிடம் மேலும் அதிக உதவிபெறுவதுமே காரணம் என்று புட்டோ கூறினர்.

இந்தியாவுக்கு இராணுவ உதவி அளிப்பதில் சோவியத் யூனியனுடன் அமெரிக்கா போட்டியிடுவது அமெரிக்காவின் நன்மைக்கு ஏற்றதல்லவென்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

இந்தியா தனது ராணுவ பலத்தை அதிகரிப்பது சீனவுக்கு எதிராக அல்லவென்றும் பாகிஸ்தானுக்கு எதிராகவேயென்றும் புட்டோ கூறினர்.

# காஷ்மீர்: இந்தியா-பாகிஸ்தான் நேரடிப் பேச்சு

## பாதுகாப்பு சபையில் சோவியத் பிரதிநிதி

நியுயோர்க், மே 14

ஐ. நா. பாதுகாப்புச்சபையில் காஷ்மீர் விவாதத்தை முடித்து வைக்க அங்கத்தவர்களிடையே ஒருமனதான கருத்தை உருவாக்க முயலப்போவதாக பாதுகாப்புசபைத் தலைவர் நேற்று அறிவித்தார்.

காஷ்மீர் பிரச்னைக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுகாண்பதற்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும் வெளியார் தலையீடு நிலைமையை மோசமாக்கிவிடக்கூடுமென்றும் சோவியத் பிரதிநிதியும் பொலிவியாப் பிரதிநிதியும் பேசுகையில் தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட கட்சியினர் ஏற்றுக் கொண்டால்தான் ஐ. நா. தலைமைக் காரியதரிசியின் நற்பணியை உபயோகிக்க முடியுமென்றும் இரு தரப்பினரும் ஏற்காமல் செய்யப்படும் எந்தத் தீர்மானமும் பயன்தர மாட்டாதென்றும் பொலிவியாப் பிரதிநிதி கூறினர்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வகுப்பு ஒற்றுமையைப் பேணுவதற்காக இரு நாடுகளும் புதிதாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு இதுவே தக்க தருணம் என அமெரிக்கப் பிரதிநிதி கூறினர்.

காஷ்மீர் சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் புதுப்பிக்க வேண்டுமென பிரிட்டிஷ், பிரஞ்சுப் பிரதிநிதிகள் கூறினர்.

# சாவனின் அமெரிக்க விஜயம்

பம்பாய், மே 14

எந்தவிதமான ராணுவ உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாமென்பதுபற்றி அறிந்து கொள்ளவே தாம் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் செல்வதாக இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் நேற்று இங்கு தெரிவித்தார். பாதுகாப்பு ஆயத்தங்கள் பொருளாதார முன்னேற்றத்தைப் பின்தங்கச் செய்துவிடக்கூடாது என்பதில் அரசாங்கம் அக்கறை கொண்டிருப்பதாக அவர் கூறினர்.

# 'முஸ்லிம்களின் போதனுமொழிதமிழ்'

## சிலாபத்தில் தீர்மானம்

சிலாபம், வியாழன்

முஸ்லிம் மாணவர்களுக்கு தமிழே போதனமொழியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் சிலாபப் பகுதி முஸ்லிம் கல்வி மகாநாட்டில் நிறைவேற்றப் பட்டது. இத்தீர்மானத்துக்கு பெரும்பான்மையானவர்கள் ஆதரவளித்தனர்.

முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஜனுப் எஸ். எம். தாஜுதீன் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் கலந்து கொண்ட அகில இலங்கை முஸ்லிம் சங்கத்தின் கல்வித்துறை நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஜனுப் என். எல். எம். ஷாபி மரிக்கார் பேசுகையில் கூறியதாவது:

"முஸ்லிம்களின் கல்விநலன் சம்பந்தமாக எல்லோரது கருத்தையும் அறியும்பொருட்டு பிரதேசமகாநாடுகள் நடத்துவது நல்லது. சிலாபப் பகுதியிலிருந்து ஐந்து பிரதிநிதிகள் விரைவில் நடத்தவிருக்கும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கின்றேன்'

நீண்ட விவாதத்தின் பின், தமிழ் முஸ்லிம்களின் போதனமொழியாக இருக்க வேண்டுமெனவும் சிங்களம் இரண்டாவது மொழியாக இருக்க வேண்டுமெனவும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

# கம்போடியா குற்றச்சாட்டு

சைகோன், மே 14

தென்வியட்நாமில் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் படவிருப்பதாகவும் இதற்கென 75 போர் விமானங்கள் வந்து கொண்டிருப்பதாகவும் அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. ரொபர்ட் மக்னமாரா சைகோனிலிருந்து நேற்றுப் புறப்படுமுன் தெரிவித்தார்.

இதேசமயம் கம்போடியா அரசாங்கம் ஐ. நா. பாதுகாப்புச்சபையை உடனடியாகக் கூட்டி கம்போடி பிரதேசத்தில் அமெரிக்காவும் தென்வியட்நாவும் நடத்தும் ஆக்கிரமிப்புச் செயல்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுள்ளது. ஐ. நா. பார்வையாளர்களை கம்போடிய எல்லைக்கு அனுப்ப வேண்டுமெனவும் அது கேட்டுள்ளது.

கம்போடியாவின் புகார் பரிசீலனை செய்யப்படுவதாக பாதுகாப்பு சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# பிரஞ்சு உதவி நிறுத்தம்

பாரிஸ், மே 14

டுனிஷியாவில் பிரஞ்க்காரருக்குச் சொந்தமான ஆறு லட்சம் ஏக்கர் நிலத்தை டுனிஷிய அரசாங்கம் தேசியமயமாக்கியதை ஆட்சேபித்து டுனிஷியாவுக்கு அளித்துவந்த பொருளாதார உதவியை பிரான்ஸ் நிறுத்திக்கொண்டுவிட்டது. நேற்று நடைபெற்ற பிரஞ்சு மந்திரி சபை இவ்வாறு முடிவு செய்ததாக மந்திரிசபைக் கூட்டத்தின்முடிவில் தகவல் மந்திரி தெரிவித்தார். டுனிஷியாவுக்கு எதிரான இதர நடவடிக்கைகள்பற்றியும் பிரஞ்சு அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

# பிரி. பிரதமருக்கு நேரு கடிதம

லண்டன், மே 14

காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாட்டில் தென்ரொடிஷியப் பிரதமர் கலந்து கொள்வதைத் தாம் விரும்பவில்லையென்று இந்தியப் பிரதமர் திரு. நேரு பிரிட்டிஷ் பிரதமருக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார். வட ரொடிஷியப் பிரதமர் மகாநாட்டிற்கு அழைக்கப்பட வேண்டுமெனவும் நேரு தெரிவித்துள்ளார்.

லாவோஸ்

# இரு படைகள் இணைப்பு

வியன்டைன், மே 14

லாவோசில் வலதுசாரிப் படையும் நடுநிலைமைப்படையும் ஒன்ருக இணைந்துகொண்டன.

இதே சமயம் லாவோசில் நிலைமை மோசமாக இருப்பதாகவும் லாவோசில் எச்சமயத்திலும் உள்நாட்டுச் சண்டை மூளக்கூடுமென்றும் லாவோசுக்கான சர்வதேசக் கமிஷன் தலைமை நாடுகளுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் சீன குறிப்பிட்டுள்ளது. சர்வதேசக் கமிஷன் மகாநாட்டை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்று சீன கேட்டுள்ளது.

# விபத்தில் சிக்கிய மந்திரி

சண்டிகார், மே 14

கார் விபத்தில் காயமடைந்த ஆந்திர கல்வி மந்திரி திரு. பி வி. ராஜுவின் உடல்நிலை இன்னும் ஆபத்தாகவே இருக்கிறதென அறிவிக்கப்படுகிறது. சண்டிகார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள அவரை கவர்னர் ஹாபீஸ் முகம்மது இப்ராகிம் சென்றுபார்த்தார்.

# இலங்கையில் இடதுசாரி ஆட்சி

## லண்டன் பத்திரிகை கருத்து

லண்டன், மே 14

இலங்கையில் இடதுசாரி ஆட்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக இங்கிருந்து வெளியாகும் 'த எக்கணமிஸ்ற்' என்ற பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பார்லிமென்ட் ஒத்திவைக்கப்பட்டுள்ளது முதல் பிரதமர் இடதுசாரித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது வரை "தேநீர்க் குவளையில் புயல்" என்ற தலையங்கத்தின் கீழ் விபரமாக எழுதப்பட்டுள்ளது. திரு. இலங்கரத்ன டாக்டர் என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தன ஆகியோரைப் பற்றியும் அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அருப்புக் கோட்டை ரயில்பாதை

சென்னை, மே 14

இரண்டு கோடி 30 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட அருப்புக் கோட்டை மானமதுரை ரயில் பாதையை இம்மாதம் 25-ந் திகதி ரயில்வே மந்திரி திருதாசப்பா போக்குவரத்துக்குத் திறந்து வைப்பார்.

அரக்கோணம் ஈரோடு ரஸ்தா அமைப்புவேலைகளும் நடைபெற்றுவருகின்றன.

# 3,40,000 அகதிகள்

புதுடில்லி, மே 14

முகாம்களில் வாழும் அகதிகளுக்கு வசதியளிக்குமுகமாக டைரக்டர் ஜெனரல் காரியாலயம் ஒன்று அமைக்கப்படவிருப்பதாக மறுவாழ்வளிப்பு மந்திரி மகாவீர் தியாகி தெரிவித்துள்ளார்.

இதுவரை பாகிஸ்தானிலிருந்து மூன்று லட்சத்து நாற்பதாயிரம் அகதிகள் வந்துள்ளனரென்றும் புதுமுகாம்கள் அமைக்கப்படுவதுடன் ஏற்கனவேயுள்ள முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன வென்றும் அறிவிக்கப்படுகிறது.

# ஜப்பானைப் பின்பற்றுக!

## தொழிலாளருக்கு கலுகல்லை வேண்டுகோள்

பொல்காவலை, புதன்

"இலங்கைத் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் தமது சுயநல நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காகத் தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்யும்படிதூண்டுவதையே தமதுமுக்கியபணியாகவரித்துள்ளார்கள் வெளிநாடுகளிலுள்ள தொழிலாளர்களிடமிருந்து நமது தொழிலாளர்கள் தெரிந்து கொள்ளவேண்டியவை நிறைய இருக்கின்றன." இவ்வாறு அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லை ரம்புக்கனை மகாவித்தியாலயத்துக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் கூறினர்

அவர் மேலும் பேசுகையில்: "ஜப்பானியத் தொழிலாளர்கள் தேசிய உணர்வு நிறைந்தவர்கள். அவர்களை இலகுவாகத் தொழிற்சங்கத் தலைவர்களால் ஏமாற்றமுடியாது. நான் சமீபத்தில் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது 100,000 தொழிலாளர்கள் தமது சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்று கோரி வேலைநிறுத்தம் செய்தார்கள். ஜப்பான் பிரதமர் தமது நாடு எதிர் நோக்கவேண்டிய பொருளாதாரப் பிரச்னைகளைத் தெளிவுபடுத்தியதும், தமக்குச் சம்பள உயர்வு தேவையில்லை என்று கூறி அத்தனை தொழிலாளரும் வேலைக்குத் திரும்பினர்."

கல்விநிலை பற்றி அவர் குறிப்பிடுகையில், கிராமப் பள்ளிகள் பட்டினக் கல்லூரிகளைவிடக் கல்வித்தரத்தில் உயர்ந்தன என்பதை சமீபத்தில் வெளியாகிய பரீட்சை முடிவுகள் நிரூபித்துவிட்டன என்றும் கிராமப் பாடசாலைகளுக்கு விஞ்ஞான பரிசோதனைக்கூடம், விளையாட்டிடம் ஆகிய வசதிகளை விரைவிற் செய்யத் தாம் உத்தேசித்திருப்பதாயும் கூறினர்.

# பொய்வதந்தி பற்றி யு. என். பி. அறிக்கை

கொழும்பு, புதன்

"இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்வதற்காகத் திருமதி பண்டாரநாயக்கா நமது கட்சிக்கெதிராக உண்மைக்குப் புறம்பான பொய்வதந்திகளைக் கிளப்பி வருவதையிட்டு நாம் வருத்தமடைகிறோம்" என்று ஐக்கியதேசியக் கட்சியின் இணைக்காரியதரிசிகளில் ஒருவரான திரு. எம்.டி. எச். ஜயவர்த்தன நேற்றுப் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியொன்றிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிர்வாகக்குழு கடந்த சனிக்கிழமை கூடியபோது சொற்பொழிவாற்றிய பிரதமர் தமது பேச்சின் முடிவுரையில் தெரிவித்ததாகப் பத்திரிகைகளிற் காணப்படும் சில கருத்துக்களுக்கு நாம் விளக்கம் கொடுப்பது மிகமிக அவசியமாகிறது. இரண்டு விஷயங்கள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒன்று காலஞ்சென்ற பிரதமரின் சமாதிககு எதிர்ப்பு, திரு. டபிள்யு. ஜி. செனிவிரத்னவால் அத்தனகலை கிராமசபையில் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்பது. மற்றது மேதின ஊர்வலத்தில் கலந்து கொண்ட யு. என். பி. ஆதரவாளர்கள் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கு எதிராகச் சுலோகங்களைக் கோஷித்துச் சென்றதை அறிந்ததும் திரு. டட்லி சேனநாயக்கா வாளாவிருந்தார் என்பது.

முதலாவது குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில் திரு. செனிவிரத்ன தாம் அப்படி எத்தகைய எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்றெமக்குத் தெரிவித்துள்ளார். அத்தனகலை கிராமசபைத் தேர்தலில் ஹொரகொல்லை வட்டாரத்திற்கு யு. என். பி. அபேட்சகரை நிறுத்தி வெற்றிபெற்றுள்ளார் என்றும் யு. என். பி.யே சமாதியை மற்றெந்தக் கட்சியையும்விட பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டும் என அப்பகுதி மக்கள் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது குற்றச்சாட்டு கூறுவதுபோல் எத்தகைய கோஷமும் எமது கட்சி ஆதரவாளரால் கிளப்பப்பட்டதாக நாமறியோம். ஆனல் மற்றைய கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலக்காரர்கள் எமது கட்சித் தலைவரைத் தூஷித்ததை நாம் அறிவோம்.

# தீவுப்பகுதி ஆசிரியர் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பதினேரம்சக் கோரிக்கைகளை விளக்கி எதிர்வரும் சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தீவுப்பகுதியிலிருந்து பெருந்தொகையான ஆசிரியர்கள் கலந்துகொள்ள விருப்பதாக அறியப்படுகிறது.

# உறவு துண்டிப்பு

வாஷிங்டன், மே 14

கியூபாவுடனுள்ள ராஜிய உறவை பிரேஸில் துண்டித்துக் கொண்டுள்ளது.

மட்டக்களப்பில்

# தந்திச்சேவை தாமதம்

மட்டக்களப்பு, வியா.

மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் கடந்த மூன்று தினங்களாக தந்திச்சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமை காலையில் தந்திச் சேவையில் சிறிதுகோளாறு ஏற்பட்டிருந்ததால் தந்திகள் அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து ஒவ்வொருநாளும் தந்திகள் தபால் மூலமே அனுப்பப்பட்டு வருகின்றன. சாதாரண தந்திகளை மட்டுமே தபாலதிகாரிகள் ஏற்றுக் கொள்ளுகின்றனர். அவசரத் தந்திகளையும் பத்திரிகைத் தந்திகளையும் கடந்த மூன்று தினங்களாக் தபாலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

# தங்கனிக்கா இணைப்பு

தாருல்இஸ்லாம், மே. 14

தங்கனிக்காவும் ஸான்சிபாரும் இணைந்துகொண்டது ஐ. நா. சபைக்கு முறைப்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரு நாடுகளினதும் பிரதிநிதித்துவம் இனி ஒன்ருக இருக்குமாதலால் ஐ. நா. அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை 112 ஆகக் குறையும்.

# "தேசிய செய்தி ஸ்தாபனம் நிறுவப்படவேண்டும்"

## பத்திரிகைக் கமிஷன் முன் திரு. அமரசிங்கம் சாட்சியம்

கொழும்பு, வியாழன்

பொது மக்களினதும் அரசாங்கத்தினதும் அபிலாஷைகளையும், கருத்துக்களையும் குறிக்கோளுடனும், உண்மையுடனும் பிரதிபலிக்கக் கூடிய செய்திகளை அளிக்கக்கூடிய தேசிய செய்தி ஸ்தாபனம் ஒன்று நிறுவப்படவேண்டும் என 'டிரிபியூன்' பத்திரிகையின் ஆசிரியரான திரு. எஸ். அமரசிங்கம் நேற்றைய தினம் பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சிய மளிக்கையில் தெரிவித்தார்.

இந்த தேசிய செய்தி நிறுவனம் அரசாங்கத்தால் நடத்தப்படவேண்டும். அல்லாவிடில் தனிப்பட்டவர்களால் அரசாங்கத்தின் உதவியுடன் நடத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இப்பொழுதுள்ள பி. ரி. வி. செய்தி ஸ்தாபனத்தை ஏகபோக உரிமை கொண்டாடும் ஏரிக்கரை பத்திரிகைகளையும், 'டைம்ஸ்'பிரிவு பத்திரிகைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டால் தேசிய செய்தி ஸ்தாபனம் புதிதாக நிறுவவேண்டிய அவசியமிருக்காதெனவும் அவர் குறிப்பிட்டார். ஜனநாயக பத்திரிகைச் சுதந்திரத்தை உருவாக்குவதில் தேசிய செய்தி ஸ்தாபனம் ஒன்றில்லாமையே தடையாக இருந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். திரு. அமரசிங்கம் தமது சாட்சியத்தில் பெரும் பகுதியை இரகசியமாகவே அளித்தார்.

---

### நைஜீரியா சென்றார்

சுழிபுரம், வியாழன்

கடந்த நான்கு வருடங்களாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் விஞ்ஞானக் கல்வி விரிவுரையாளராகக் கடமையாற்றிய சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. இ. பாலசுப்பிரமணியம் நைஜீரிய அரசாங்கத்தின் அழைப்பில் ஆசிரியர் உத்தியோகம் பார்ப்பதற்கு நேற்றைய தினம் கட்டுநாயக்கா விமான மூலம் நைஜீரியாவுக்கு பயணமானார்.

---

### 'ஓவசியர் முறை நீக்கப்படும்'

கொழும்பு, வியாழன்

வீதிகள் அமைப்பும் மற்றும் பரிபாலன வேலைகளும் சங்கங்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனுல் ஓவசியர்மார் மூலம் இவ் வேலைகள் செய்யப்படுவது ஒழிக்கப்படும் என்றும் தபால் மராமத்து அமைச்சர் திரு. எம். பி. டி. சற். சிறிவர்த்தனு தெரிவித்துள்ளார்.

---

### சீர்கேடான நிலையில் தொலைபேசிகள்

கொழும்பு, மே 14

கடந்த பத்து நாட்களாக தொலைபேசிகள் ஒழுங்காக வேலைசெய்யவில்லை. 5,000 க்கு மேற்பட்ட தொலைபேசிகள் வேலை செய்யவில்லை என்றும் அவைகளில் பெரும்பான்மையானவை வர்த்தக ஸ்தாபனங்களைச் சேர்ந்தவையே.

இப்படிப்பட்ட சீர்கேடான நிலைமை வந்ததற்குக் காரணம் நிலத்துக்குக் கீழே உள்ள கம்பிகள் அறுபட்டு உள்ளதே என்கிறார் தொலைபேசி நிலையத்தைச் சேர்ந்த ஒருவர்.

திருத்துவதற்கான வேலை களில் வேலையாட்கள் ஈடுபட்டுள்ளார்களென்றும் ஆற்றல் மிக்க பொறியியல் நிபுணர்கள் மிகவும் துணுக்கமாக பணியாற்றிவருகிறார்களென்று ம தொலைபேசி நிலையத்தைச் சேர்ந்த அவர் குறிப்பிட்டார்.

---

### கல்லூரியின் 150வது ஆண்டு விழா

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பின் மிகப்பழமை வாய்ந்ததும் மெதடிஸ்ட் ஸ்தாபனத்தினுல் ஆரம்பிக்கப்பட்டதுமான மெதடிஸ்ட் மத்திய கல்லூரியின் 150-வது ஆண்டு விழா நிகழ்ச்சிகள் இன்று காலை 8 மணி முதல் ஆரம்பமாகின்றன. கல்லூரியின் 150-வது ஆண்டுவிழா விசேஷ நிகழ்ச்சியாக கலை, விஞ்ஞான, ஈழத்து எழுத்தாளர்களின் இலக்கியப்படைப்புகள் ஆகியவற்றைக் கொண்ட பொருட்காட்சியொன்று இரு தினங்களுக்குநடைபெறவிருக்கின்றன.

---

# 'நாட்டை விட்டுச்செல்ல நாம் தயாரில்லை'

## தோட்டதொழிலாளர் காங்கிரஸ் உபதலைவர் அறிவிப்பு

ரக்குவானை, வியாழன்

இலங்கை-இந்தியர் பிரச்சினையைத் தீர்க்க இதுவரை அரசாங்கம் எடுத்துவந்த முயற்சி எல்லாம் பயனற்றுப் போய்விட்டதாகவும் நாடுகடத்தும் திட்டம் இவற்றுள் ஒன்றெனவும் இது செயல்படுத்தக் கூடியதோ அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டமோ அல்ல என்றும், இதுவெறும் கண்துடைப்பே எனவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப-தலைவர் திரு. எஸ். எம். சுப்பையா குறிப்பிட்டுள்ளார்.

ரக்குவானை மாவட்டக் கிளைக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சுப்பையா மேலும் பேசுகையில் கூறியதாவது:- 'இந்நாட்டுக்கு எவ்வளவோ பணிபுரிந்துள்ள தோட்டத் தொழிலாளர்கள் இந்த அலவ்வஸ்லை ஏற்று நாட்டைவிட்டுச் சென்றுவிடமாட்டார்கள். இலங்கையே இந்தத் தொழிலாளர்களின் நாடு. இந்நாட்டிலேயே இத்தொழிலாளர்கள் வாழ்ந்து மடிவார்கள்.

முடிவற்ற இப்பிரச்சினைக்கு அரசாங்கம் நல்லதொரு தீர்வு காண விரும்பினுல் தோட்டத் தொழிலாளரின் பிரதிநிதிகளாக இருக்கும் எம்முடன் முதலில் தொடர்புகொள்ள வேண்டும்.'

21 கோரிக்கைகள் சம்பந்தமாக தொழிற்சங்கங்கள் மௌனம் சாதித்துவருகின்றன என்று அவர் குறிப்பிட்டு இவ்விதநிலை நீடித்தால் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தனது 6 கோரிக்கைகளுக்குமாகப் போராடுமென்றும் அவர் கூறினர்.

---

### மட்டக்களப்பில் ஜப்பானிய ஷெரி புஷ்பக்காட்சி

மட்டக்களப்பு, வெள்ளி

ஜப்பானிய அரசாங்க தூதுவராலயத்தின் ஆதரவில் ஜப்பானிய ஷெரி புஷ்பக் காட்சியொன்று இன்று முதல் பொது மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்படவிருக்கின்றது. மட்டக்களப்பு விக்டோரிய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பொருட்காட்சியில் புஷ்பாலங்கார கலைப் போதனை பற்றியும் மக்களுக்கு விளக்கப்படும்.

---

### வானெலியில் உரை

இலங்கை வானெலியில் இன்று இரவு 9-15 க்கு கன்னுகம் திரு. கு. அம்பலவாண பிள்ளை "காசிவாசி செந்திநாதையர்" என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

---


# ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமோ! நெஸ்டோமோல்டில் சுவை நிரம்பியிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ஏற்கனவே நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக இருக்க வேண்டும் (அநேகமாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், இன்றே இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடைவீர்களே தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளிர்மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுக்க உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல! டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதனைக்கு நன்மையை அளிக்கிறது!

## வானொலிநிகழ்ச்சிகள்

வெள்ளி 15-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் — சி. செல்லத்துரை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 வி. ஜெயவீரசிங்கம் — பாட்டு, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு — கே. அம்பலவாணபிள்ளை — 'மகாவித்வான் காசிவாசி செந்திநாதஐயர்', 9-30 நேயர்விருப்பம், 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 காந்திஅஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 டி. வி. சிவலிங்கம் — பாட்டு.

மாலை 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கி எழும் பாரதம் — சித்திரம், 7-45 டி. கே. பட்டம்மாள் — பாட்டு, 9-15 இசைமாலை, 9-30 மெல்லிசை, 10-00 திரைப்படஇசை.


**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Daily 3Shows. Sats.&Suns. Four
Elvis Presley
in
IT HAPPPENED
at the
WORLD'S FAIR
(Panavision Metro color)


# கல்வி அறிக்கையை ஆராயக் கமிஷன் வேண்டும்!

## முஸ்லிம் கல்விமகாநாடு வேண்டுகோள்

கண்டி, வியாழன்

ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் நிகழ்ந்த முஸ்லிம் கல்வி மகாநாட்டில், முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் கல்வி அறிக்கையின் சாதக பாதகங்களை ஆராயக்குழுவொன்றை நியமிக்கும்படி சமீபத்தில் கூடவிருக்கும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டைக் கோரும் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

பிரேரணையைக் கொண்டு வந்த கம்பளை நகரசபை உறுப்பினர் திரு. டி. வி. எம். நூன் பேசுகையில் வெள்ளை அறிக்கை அமுல் நடத்தப்படு முன் இந்தஆராய்வுக் குழுவின் அலோசனைகள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும் என்றார்.

திரு. நூன் தமது பேச்சிடையே பின்வரும் மூன்று முக்கிய கருத்துக்களைத் தெரிவித்தார்.

1. முதலாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை முஸ்லிம்களின் போதனாமொழி தமிழாகவே இருக்க வேண்டும். சிங்கள மக்களிடை வாழும் முஸ்லிம்களின் போதனாமொழியாகச் சிங்களமொழி ஏற்றுக்கொள்ளப்படலாம்.

2. முஸ்லிம் சிறுவர் சிறுமியர் மூன்றும் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைத் தமது இரண்டாது மொழியாகப் பயில வேண்டும்.

3. முஸ்லிம் மாணவர்கள் ஐந்தாம் வகுப்பிலிருந்து சிங்களத்தைக் கட்டாய பாடமாகப் பயிலவேண்டும். அப்படிப் பயில்வதனால் அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவியவர்களாவர்.

## ஆசிரியகலாசாலையின் ஆளும் மன்றம்

கொழும்புத்துறை, வியா.

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் இவ்வாண்டின் இரண்டாம் பருவத்து ஆளும் மன்றம், கலாசாலை அதிபர் திரு. எஸ். கனகலிங்கத்தின் தலைமையிற் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதம அமைச்சர் திரு. எஸ். திருச்சிற்றம்பலம், கல்வி அமைச்சர்: திரு. ஆர். மகாலிங்கம், நிதியமைச்சர்கள்: திரு. க. வல்லிபுரம், திரு. ரீ. அழகரத்தினம், தொழிலமைச்சர்: திரு. ஜி. யோசவ், பாதுகாப்பு அமைச்சர்: திரு. எஸ். செல்வச்சந்திரன், சுகாதார அமைச்சர்: திரு. என். நாகரத்தினம், தபால் அமைச்சர்: திரு. சீ. செல்வநாயகம்.

பத்துப் பேரைக் கொண்ட உணவுக் குழுவொன்றும் பிரஸ்தாப தெரிவில் தெரிவு செய்யப்பட்டது.

## விரிவுரையாளருக்குப் பிரியாவிடை

கொழும்புத்துறை, வியா.

"திரு. ஜே. எஸ். செல்வநாதர் சிறந்த பண்பாடுள்ளவர் இவர் சுமார் 16 ஆண்டுகளாக எங்கள் கலாசாலையிலே ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவரின் அயராத சேவையினாலும் சிறந்த போதனையினாலும் எத்தனையோமாணவர்களெல்லாம் நன்மையடைந்துள்ளனர். இவர் எங்கள் கலாசாலையில் இருந்து சுறுசுறுப்புடன் பணியாற்றியது போல் ஏனைய கலாசாலைகளிலும் பணியாற்ற இறைவன் திருவருள் செய்தல் வேண்டும்"

இவ்வாறு கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் 16 ஆண்டுகள் சேவை செய்து மட்டக்களப்பு அட்டாளைச்சேனை ஆசிரியகலாசாலைக்கு மாறிச் செல்லும் திரு. ஜே. எஸ். செல்வநாதருக்கு ஆசிரியர்களும் ஆசிரியமாணவர்களும் சேர்ந்து சென்ற திங்கட்கிழமை அளித்த பிரியாவிடையின் போது தலைமைவகித்துச் சொற்பொழிவாற்றிய அதிபர் திரு. எஸ். கனகலிங்கம் கூறினார்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தேரில் நல்லூர் கந்தன் பவனி வருவாரென்றும், ஓரன்பர் வந்து தெரிவித்தார். பக்தியுடன் பல அன்பர்கள் காணிக்கை செலுத்திவருவதாயும், இதைக் கட்டி முடிக்க இன்னும் பொருள் தேவையென்றும் அறிவிக்கப்படுகிறது. பலர் உள்ளங்களிலும் கோயில்கொண்டுள்ள அந்தக் கந்தன், தமது இந்தப் புதிய கலைத்தேரைக் கட்டிக்கொள்வாரென்றும் இதனால் நல்லூரின் பெருமையும் புகழும் மேலும் உயருமென்றும் பல பக்த உள்ளங்களும் நம்புகின்றன.

* * *

இன்று இஸ்லாமிய புது வருடம். எனது முஸ்லிம் அன்பர்கள் அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்.

* * *

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந் திருவடி மேல் அலரிட்டுத் தேடி நின்று, நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக், காவார்ந்த பொழிற் சோலைக் காணப் பேராய் கழுக்குன்றத் துச்சியாய் கடவுளே நின், பூவார்ந்தபொன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

— திருநாவுக்கரசர்

## திருமண அழைப்பு

திரு. ச. சின்னத்தம்பி (மலாயன் ரயில்வே போக்குவரத்து கட்டுப்பாட்டு ஓய்வு பெற்ற இன்ஸ்பெக்டர், கோலாலம்பூர்) அவர்களின்புதல்வன் திருநிறை செல்வன் தெய்வேந்திர ராஜ் (தலைமை ஆசிரியர் கோலசிலங்கூர்) அவர்களுக்கும் செ. ஆதிரத்தினம் (நல்லூர் யாழ்ப்பாணம்) அவர்களின் புத்திரி திருநிறை செல்வி யோகமணிக்கும் வைகாசி மாதம்2-ம் திகதி (15-5-64) வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணி முதல் 8-00 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில் நல்லூர் சிவன்கோவில் மண்டபத்தில் திருமணம் நிகழும். அத்தருணம் சமுகம்தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
இ. சபாலிங்கமும்
பாரியாரும்.

"கமலாசனம்"
98, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். 414

## திருமண அழைப்பு

நிகழும் குரோதி வருஷம் வைகாசி மாசம் 4-ம் திகதி (17-5-64) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு வரும் சுபமுகூர்த்தத்தில் எங்கள் மருமகளும் தற்போது மலாய்நாட்டில் வசிக்கும் கா. பெரியதம்பியும், காலஞ்சென்ற நேசராணியின் மகளுமாகிய திருநிறை செல்வி இலங்கராணிக்கும் கைதடி திரு. அ. இலங்கையர் தம்பதிகளின் மகன் திருநிறை செல்வன் இ. உருத்திரன் (Asst. mechanical Engineer, Irrigation Department) அவர்களுக்கும் திருமணம் எங்கள் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்பர்கள் உறவினர்கள் யாவரும் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறேம்.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லாததால் இதைத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்;

ச. இராசரத்தினம்
தம்பதிகள்

இராஜன் மில்,
புன்னாலைக்கட்டுவன் 407

## கேள்வி விளம்பரம்

கிராமசபை - புங்குடுதீவு

1. ஆவரங்கால் சங்குமாலடி ரோட்டு
2. ஆலம்புலம் சிறிய கொண்டல் ஒழுங்கை

புங்குடுதீவுக் கிராமச்சபை அக்கிராசனர் அவர்களால் 1964-ம் ஆண்டு வைகாசிமாதம் 23-ம் திகதி சனிக்கிழமைகாலை 9-00 மணிவரை மேற்படி வேலைகளுக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து "சீல்" வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 35-00 (முப்பத்தைந்து) கட்டி 21-5-64 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் புங்குடுதீவுக் கிராம சபையில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரத்திற்குக் கட்டிய பணத்தில் ரூபா 5-00 (ஐந்து) திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. விபரங்களைப் புங்குடுதீவுக் கிராமசபை அலுவலகத்திலும் உள்ளூராட்சி உதவி அதிபர் (வட மேல் பிரதேசம்) யாழ்ப்பாணம் அவர்கள் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இன்னும் பல நன்கொடை வேலைகளுக்கும் கேள்விப்பத்திரங்கள் வரவழைக்கப்படுகின்றன.

இங்ஙனம்
சி. கு. அம்பிகைபாகன்,
அக்கிராசனர்.

கிராமசபை அலுவலகம்,
புங்குடுதீவு-9-5-1964. 364

## வரி விளம்பரம்

### ஆள் தேவை

மோட்டார் வாகனங்கள் "பெர்குஷன்" உழவு யந்திரங்கள் திருத்தல், மின்சார (Wiring) வேலை, மின்சாரஉபகரணங்கள் திருத்தல் ஆகியனவற்றிற்கு நன்கு அநுபவம் வாய்ந்த மெக்கானிக், எலக்றிஷன் ஆகியோர் உடன் தேவை. 20-5-64க்கு முன் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

"மொடேர்ன் கறூஜ்",
நவீன கம - கைத்தொழில்
கூட்டுத்தாபனம்,
யந்திரசாலை வீதி,
363 வவுனியா,

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில் சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.
2. கபிரியேல் ஓயின்மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.
3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துவி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்: GABRIELS, Chunnakam. 273

### விற்பனைக்கு

வவுனியாவில் இருந்து மன்னார் ரோட்டில், ரோட்டு அருகாமையில் உள்ள காணியில் விறகு விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும்: பாலசிங்கம் பிறதர், 30, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 272. 275

### ஆள் தேவை

யாழ் நகர எல்லைக்குள் வீரகேசரி, மிரர், ஈழநாடு ஆகிய பத்திரிகைகளை விநியோகம் செய்வதற்கு தகுதி வாய்ந்த இளம் வாலிபர் உடனேதேவை. நேரில் வரவும். யாழ் பீடா, பழையபஸ் நிலையம், யாழ்ப்பாணம். 415

### காணவில்லை

நல்லூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 13-5-64-ந் திகதி இரவு 7-00 மணி போல் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுது பெரிய ஒரு என்வெலப் காணாமல் போய்விட்டது. இதில் சிவசம்பு நாகேஸ்வரியின் பிறப்புப்பத்திரமும், எஸ். எஸ். ஸி. பத்திரமும், கந்தையா பரமேஸ்வரியின் பி. ஏ. பத்திரமும் (இலங்கை) வேறு சில பத்திரங்களும் இருந்தன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'ஈழநாடு' அலுவலகத்தில் அல்லது வே. சிவசம்பு, கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறைக்குச் சேர்ப்பித்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 416

### விற்பனைக்கு

பனைச் சந்தையில் பஸ் நிற்குமிடத்திற்கு நேரெதிரில் கண்டி—கொழும்பு ரோட்டில் வியாபாரத்திற்கு மிகவும் உகந்தது ஐந்து லாச்சம் காணி விற்பனைக்குண்டு. கலந்து கொள்ளவும். 2, மெயிட்லண்ட் கிரசெண்ட், கொழும்பு 7. 412

### தேவை

யாழ்ப்பாணம், லேக் வியூ ஹோட்டலுக்கு (Lake View Hotel) ஓர் கணக்கப்பிள்ளை தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். 413


அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
**நானும் ஒரு பெண்**
இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

வெற்றிகரமான 7வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) லக்ஷ்மி (கரவெட்டி)
மற்றும் 8 திரைகளில்



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
**பெரிய இடத்துப் பெண்**

# அடுத்த வாரத்தில் புதிய மந்திரி சபை?

## முக்கிய முடிவுகள் இவ்வாரம் வெளியாகும்

கொழும்பு, புதன்

அடுத்த புதன்கிழமை புதிய மந்திரிசபையின் அங்கத்தவர்களைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தேர்ந்தெடுத்துவிடுவாரென்றும், அன்றைய தினமே புதிய மந்திரிகள் இராணி மாளிகைக்குச் சென்று சத்தியப்பிரமாணம் செய்யலாமென்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அநேகமாக இந்த வாரத்தில் பல முக்கியமான முடிவுகள் வெளியாகுமென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

புதிய மந்திரிசபையின் அமைப்புவேலைகளை காலம் தாழ்த்தாமல் கூடிய விரைவாகவே முடித்துக்கொள்ள வேண்டுமென்று கூட்டரசாங்கம் அமைப்பதில் அக்கறைகொண்டவர்கள் கருதுவதாக அறியப்படுகிறது.

புதிய மந்திரிசபையில் இடம் பெறுவருக்கும் அங்கத்தவர்களின் பெயர் பட்டியல் இந்த வாரத்திலேயே தயாரிக்கப்படலாமென்றும் புதிய மந்திரி சபை அடுத்தவாரத்தில் பதவியேற்கலாமென்றும் கூறப்படுகிறது.

## காஷ்மீர்: "எந்தத் தீர்வையும் சுமத்தமுடியாது"

### பாதுகாப்பு சபையில் சக்ளா

நியூயோர்க், மே 13

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எந்த புதிய முறையையும் இந்தியா மீதோ பாகிஸ்தான் மீதோ திணிப்பதற்கு பாதுகாப்புச் சபை முயற்சி செய்யக்கூடாதென்றும் இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடியாகப்பேசித் தீர்வுகாண வேண்டிய பிரச்சினை இதுவென்றும் இந்திய கல்விமந்திரி திரு. எம். ஸி. சக்ளா நேற்று பாதுகாப்பு சபையில் காஷ்மீர் விவாதத்தின்போது பேசுகையில் தெரிவித்தார்.

பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ஜுனைப் புட்டோ இந்தியா மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு திரு. சக்ளா பதிலளித்தார்.

காஷ்மீரில் ஆக்கிரமிப்புச் செய்த பகுதியிலிருந்து பாகிஸ்தான் வெளியேறுதவரை நியாயமான தீர்வுகாண முடியாதென்றும் திரு. சக்ளா தெரிவித்தார். காஷ்மீரில் ஐந்தில் இரண்டு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ளதென்ற தமது குற்றச்சாட்டை பாகிஸ்தான் பிரதிநிதி மறுக்கமுடியவில்லையென்றும் இந்தியாவின் ஒருபகுதியை சீனாவுக்கு பாகிஸ்தான் கொடுத்துள்ளதென்றும் அவர் கூறினர்.

காஷ்மீர் அந்தஸ்தில் மாறுதல் எதையும் செய்தால் இந்திய உபகண்டத்திலேயே பெரும் குழப்பத்தை ஏற்படுத்துமென்று சக்ளா சொன்னார்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியாவும் பாகிஸ்தானும் புதிதாகப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றும் இப்பேச்சுவார்த்தைகளில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி தமது நற்பணியைப் பயன்படுத்த வேண்டுமென்றும் விண்ணப்பிக்க வேண்டுமென பந்தோபஸ்து சபையில் டொமினிக்சன் பிரதிநிதி தெரிவித்தார். இந்த யோசனையை பெல்ஜியம், நோர்வே, ஐவரிகோஸ்ட் ஆகியன ஆதரித்தன. செக்கோஸ்லவாக்கியப் பிரதிநிதி இதை எதிர்த்தார். மூன்றுமவர் இதில் தலையிடக்கூடாதென்றார்.

## ஐ. தே. க. கூட்டம்

கொழும்பு புதன்

ஐக்கியதேசியக் கட்சியின் பார்லிமெண்டரிக் குழு நேற்று பார்லிமெண்ட் சபை மண்டபத்திற் கூடி தற்போதைய அரசியல் நிலைபற்றி ஆராய்ந்தது.

பார்லிமெண்டின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் பெற்று சட்டபூர்வமான முறையில் அனுமதி பெறுவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டுவருவதுகுறித்து பல அங்கத்தவர்கள் இந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபித்ததாக அறியப்படுகிறது. தற்போதைய பார்லிமெண்டின் பதவிக்காலம் 1965-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் முடிவடைகிறது.

## "காலஞ்சென்றவருக்கு பல எதிரிகள் உண்டு"

### கொழும்புத்துறை கொலை வழக்கில் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா

கொழும்புத்துறை கொலை வழக்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசுவாலடன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காலஞ்சென்றவரின் மனைவியான நவநீதம் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு. ஜோசேப் செல்வரத்தினம் என்பவரைக் கொலைசெய்ததாக, கந்தையா ஜெயரத்தினம், கந்தையா ராஜரத்தினம், கந்தையா யோகரத்தினம், பொன்னர் கனகசபை, கந்தையா மயில்வாகனம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முதல் மூன்று எதிரிகள் சார்பிலும் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திரு. ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார். நான்காம், ஐந்தாம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரம், திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

வழக்காளி தரப்பில் யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் வழக்கை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் மனைவி நவநீதம் (வயது 46) சாட்சியமளிக்கையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு நீர் பொலிஸ் வாக்குமூலத்தில் வேறுமாதிரிக் கூறியிருக்கின்றீர் என்றார். உடனே எதிரிகளின் வழக்கறிஞர்களான திருவாளர்கள் ரி. கணேசலிங்கமும், எம். பாலசுந்தரம் ஆகியோர் எழுந்து பொலிஸ் வாக்குமூலத்தில் கூறியது உண்மையா, பொய்யா என்பதற்கு அத்தாட்சியில்லையென நீதிபதியிடம் தெரிவித்தனர். நீதிபதி இவர்கள் கூறியதை ஏற்றுக்கொண்டார்.

வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கத்தால் குறுக்கு விசாரணைசெய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:

காலஞ்சென்றவர் பல வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார் அவருக்கு அந்த ஊரில் பல எதிரிகள் உண்டு. அவர் கூடுதலாக மதுபானம் அருந்துகிறவர்.

மேல்விசாரணை இம்மாதம் 27-ந் தேதிவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## மேயர்களின் மகாநாடு இன்று நடைபெறும்

கொழும்பு, வியாழன்

இலங்கையில் உள்ள பத்து மாநகரசபைமேயர்கள் நாளை கொழும்பில் கூடி மகாநாடு ஒன்றை நடத்துவார்கள். இந்த மகாநாடு கொழும்பு மேயர் திரு. வி. ஏ. சுகததாஸா தலைமையில் கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெறும்.

ஸ்தலஸ்தாபன அமைச்சருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கக்கூடியவிதத்தில் ஸ்தலஸ்தாபனச் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரும் தீர்மானத்திற்கு மேயர்கள் ஆட்சேபம் தெரிவிப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேயர்களை நீக்குவது, நியமிப்பது, உள்ளூராட்சி மன்றங்களைத் தற்பொழுதிலும் பார்க்கக் கடுமையாகக் கட்டுப்படுத்துவது ஆகிய அதிகாரங்களை ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு வழங்குவதையே மேயர்கள் கடுமையாக ஆட்சேபிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்தலஸ்தாபன சேவை கமிஷனை கலைக்கவேண்டுமென கொழும்பு மாநகரசபை மேயர் திரு. வி. ஏ. சுகதாசா வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இக் கமிஷனை தகுதியற்றதென அவர் கருதுவதால், மாநகரசபைகளை மட்டும் நிர்வகிப்பதற்கு புதிய கமிஷன் ஒன்றை நியமிக்க மத்திய அரசாங்கத்திடம் கோரும்படி மற்ற மேயர்களிடம் கேட்டுக்கொள்ள அவர் தீர்மானித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

இம் மகாநாட்டில், கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, கண்டி, நுவரேலியா, கேகாலை ஆகிய கொழும்பு, பதுளை, மாத்தளை, தெஹிவளை—கல்கிசை ஆகிய நகரங்களின் மேயர்கள் கலந்துகொள்வார்கள்.

## "ஒரு கட்சி அரசாங்கமே இலங்கைக்கு உகந்தது"

### தொழில் மந்திரி கருத்து

கொழும்பு, புதன்

"இரண்டு, மூன்று கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்துவதிலும் பார்க்க ஒரு கட்சி அரசாங்கம்தான் இலங்கைக்கு உகந்தது. ஆனால் இப்போதைய நிலைமையில் இலங்கையில் ஒரு கூட்டரசாங்கம் அமைக்கப்படுவதை நான் ஆதரிக்கின்றேன். இடதுசாரி ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரு கட்சியாக இணைய வேண்டும்" என்று தொழில் சமூக மந்திரி திரு. குணசேகரா கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்றிரவு கொழும்பில் நடைபெற்ற பௌத்த கலாச்சார ஆசிய ஸ்தாபன கூட்டமொன்றில் கூட்டரசாங்கம் பற்றிப் பேசுகையில்தான் தொழில் மந்திரி திரு. டி. எஸ். குணசேகரா மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையில் தற்பொழுது நிலவும் பல நெருக்கடிகளையும் தீர்த்துவைக்க, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் ஒன்றுகச் சேர்ந்த கூட்டரசாங்கமொன்று அவசியம் தேவை என்றும் மந்திரி குணசேகரா குறிப்பிட்டார்.

இலங்கையை எப்பொழுதும் ஒரு கட்சி அரசாங்கம் ஆளக்கூடிய வாய்ப்புத்தான் உண்டென்றும் தொழில் மந்திரி குணசேகரா கூறினர்.

சென்னை, மே 13

உதக மண்டலத்தில் இன்று ஏற்பட்ட நிலச்சரிவுக்கு இரு பெண்கள் உட்பட நான்கு பேர் மாண்டனர். முப்பதடி உயரத்திலிருந்து மண்சரிவு ஏற்பட்டது.

## 'அப்பர் வழியை தமிழா பற்றவேண்டும்'

கொழும்பு, புதன்

"அப்பர் எவ்வாறு துன்பப்பட்டு-அல்லற்பட்டு ஈற்றில் இறைவனடி சேர்ந்தாரோ அதேபோனறு தமிழராகிய நாங்களும் இன்று பெரும் இன்னல்களுக்குள்ளாகியுள்ளோம். அப்பரை சமணர்கள் நீற்றறையில் தள்ளினார்கள்-நஞ்சை ஊட்டினார்கள்-யானையை எதிரேவிட்டார்கள்-கல்லோடு சேர்த்துக் கயிற்றினால் கட்டித் தள்ளினார்கள். இப்படிப் பல துன்பங்களைச் செய்த பொழுதிலும் ஈற்றில் அவர் விரும்பியவாறு ஈசன் பாதங்களை அடைந்தார். இது எங்களுக்கு ஒரு அற்புதமான எடுத்துக்காட்டு. ஆகவே அப்பர் வழியையே நாம் பின்பற்ற வேண்டும்" என்று குருநாகல் மாவட்ட நீதிபதி திரு. வீ. கே. கந்தசாமி கொழும்பு இந்துவாலிபர் சங்கத்தினர் செட்டியார்தெரு முத்துவிநாயகர் கோவிலில் நடாத்திய அப்பர் குருபூசை விழாவின்போது குறிப்பிட்டார்,

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் ஒருபகுதியினரான அப்பர் அருள்நெறிக் கழகத்தினர் இக்குருபூசையைக் கொண்டாடினார்கள்.

திருமதி மீனாட்சி பொன்னுத்துரை, திரு. சிவராசா ஆகியோரும் பேசினர்.

## மதியழகனுக்கு மின்சார சிகிச்சை

சென்னை, மே 13

ஹிந்தி எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் ஆறு மாதச் சிறைத்தண்டனை பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மதியழகனுக்குச் சிறையிலிருக்கும்போது காலில் வீக்கமேற்பட்டதால் மின்சார சிகிச்சை அளிக்கப்பட்டது.

தற்பொழுது பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் மதியழகனைப் பார்க்க யாரும் அனுமதிக்கப்படவில்லை.

21 கோரிக்கைகளில்

## 2 கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இசைவு

கொழும்பு, புதன்

அரசாங்க சேவையைச் சேர்ந்த சகல தொழிற்சங்கங்களும் மற்ற தொழிற்சங்கங்களுடன் இணைந்து செயல்படும் உரிமையளிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது. அதற்கான ஒரு நகல் மசோதாவை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

அரசாங்க சேவையைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் பலகாலமாக இவ்வித உரிமை கோரி வந்துள்ளன என்றும் தொழிற்சங்கங்களின் சமீபத்திய 21 கோரிக்கைகளுள் இதுவும் அடங்கியுள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொழிற்சங்கங்களின் 21 கோரிக்கைகளுள் ஒன்றான ஊழியர் சேமநிதி ஆரம்பிக்கப்படுமுன் வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு உபகாரநிதி வழங்குவது சம்பந்தமான நகல் மசோதா ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

## அருணாசலத்துக்கு நினைவு சின்னம்

### சிவாஜி அமைப்பார்

கோவிற்பட்டி, மே 14

சமீபத்தில் மறைந்த நாதஸ்வர கலாநிதி திரு. காருக்குறிச்சி அருணாசலத்திற்கு நினைவுச்சின்னம் ஒன்று அமைக்க சிவாஜிகணேசனும் பிரபல வசனகர்த்தா ஏ. பி. நாகராஜனும் முயன்று வருவதாகத் தெரிகிறது.

## பேனு விலை அதிகரிப்பு

மட்டக்களப்பு, வியாழன்

இப்பகுதியில் தரம் வாய்ந்த பேனுக்களுக்கு தற்போது பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில மாதங்களுக்கு முன்பு பெரும்பாலான பொது மக்களாலும் மாணவர்களாலும் நான்கு ரூபாவுக்கு வாங்கி உபயோகிக்கப்பட்ட ஒரு ரகப் பேனு தற்போது இருபத்திரண்டு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் ௲ திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.